# பொருளடக்கம்


| | பக்கம் எண் |
|---|---|
| பயிற்சி 1 | 1 |
| பயிற்சி 2 | 13 |
| பயிற்சி 3 | 25 |
| பயிற்சி 4 | 37 |
| பயிற்சி 5 | 49 |
| பயிற்சி 6 | 61 |
| பயிற்சி 7 | 73 |
| பயிற்சி 8 | 85 |
| பயிற்சி 9 | 97 |
| பயிற்சி 10 | 109 |
| விடைகள் | 121 |

# தாள் 1

## ‘அ’ பிரிவு (மின்னஞ்சல்)

**பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றுக்கு மட்டும் 110 சொற்களுக்குக் குறையாமல் பதில் எழுதவும்.**

*(20 மதிப்பெண்கள்)*

1. பின்வரும் உன் நண்பனின் மின்னஞ்சலைக் கவனமாகப் படித்து அதற்குப் பதில் எழுதவும்.

Message

File Edit View Insert Format Window Help

Send | Accounts ▾ | ▾ HTML

| | | |
|---|---|---|
| அனுப்புநர் | : | mani@hotmail.com |
| பெறுநர் | : | rani@yahoo.com |
| தேதி | : | 12/06/2016 |
| பொருள் | : | சமூக ஈடுபாட்டுத் திட்டம் (CIP) |

அன்புள்ள ராணி,

நீ நலமாக இருக்கிறாயா? அண்மையில் என் பள்ளியில் சமூக ஈடுபாட்டுத் திட்டத்தில் முதியோருக்கான ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அதனால், உன்னுடன் தொடர்புகொள்ள நேரம் கிடைக்கவில்லை. மன்னித்துவிடு.

எங்கள் பள்ளி மாணவர்களின் தாத்தா பாட்டிகளுக்கு இணையத்தைப் பயன்படுத்துவது எப்படி என்று உயர்நிலை நான்கு மற்றும் ஐந்தில் படிக்கும் மாணவர்கள் கற்றுக்கொடுத்தனர். அவர்களும் மிகவும் ஆர்வத்தோடு கற்றுக்கொண்டனர். அதோடு ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்களுக்குக் குறைந்த கட்டணத்தில் மருத்துவப் பரிசோதனையும் எங்கள் பள்ளியில் நடந்தது. அதற்கு நாங்கள் எங்கள் பள்ளிக்கு அருகில் உள்ள வீடுகளுக்குச் சென்று விளம்பரம் செய்தோம். மருத்துவப் பரிசோதனை நாளன்று அவர்களுக்கு நாங்கள் தேவையான உதவிகளை முகம் சுளிக்காமல் செய்தோம். அது எனக்கு மறக்கு முடியாத அனுபவமாக இருந்தது.

இதுபோல் நீ செய்த ஒரு நல்ல செயல் பற்றியும் அதனால், உனக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பற்றியும் என்னுடன் பகிர்ந்துகொள்வாய் என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

நன்றி.
உன் அன்புள்ள தோழன்,
மணி

## வாக்கியத்தை முடித்தெழுதுதல் (*10 மதிப்பெண்கள்*)

**பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு முடித்துக் காட்டுக. அவ்வாறு முடிக்கப்பெறும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் அதற்கு முந்திய வாக்கியத்தின் கருத்தையே கொண்டிருக்க வேண்டும்.**

Q6. அடுத்தவர்களை நம்பாதவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவது அரிது.

வாழ்க்கையில் வெற்றி பெற ____________________

Q7. தமிழை இரண்டாம் மொழியாகப் படிப்பவர் தொடர்பான ஆய்வுகள் பற்றிப் பேசப் பல தமிழ் அறிஞர்கள் அந்த மாநாட்டில் ஒன்று கூடினர்.

அந்த மாநாடு தமிழை இரண்டாம் மொழியாகப் படிப்பவர் தொடர்பான ஆய்வுகள் பற்றிப் பேச ____________________

Q8. இன்று மனித குலம் அனுபவிக்கும் இன்பத்திற்குச் சிந்திக்கும் ஆற்றலே மிகவும் உதவி புரிந்திருக்கிறது.

சிந்திக்கும் ஆற்றல் இருந்தாலொழிய ____________________

Q9. மக்கள் நாடோடி வாழ்க்கையினை விட்டுவிட்டு, நிலைத்த வாழ்வு வாழத் தொடங்கிய காலத்தில் குழுக்களிடையே அடிக்கடி போர்கள் நிகழ்ந்தன.

குழுக்களிடையே அடிக்கடி போர்கள் நிகழ ____________________

Q10. மனத்தின் இளமை அல்லது முதுமையைக் கொண்டுதான் மனிதனுடைய வயதைத் தீர்மானிக்க முடியும்.

மனிதனின் வயது ____________________

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை மட்டும் எழுதுக.**

Q16. ஒருவர் ஒரு செயலில் எப்போது வெற்றி பெற முடியும்?

(1) மனம் விரும்பிச் செயல்படும்போது
(2) தான் எண்ணியது கைகூடும்போது
(3) உள்ளத்தில் உறுதியோடு செயலாற்றும்போது
(4) வெற்றிபெற விரும்பி உழைக்கும்போது [ ]

Q17. மனம் இருந்தால் வழியுண்டு என்று நினைப்பவர் யார்?

(1) வாழ்க்கையை அனுபவிக்க விரும்பும் கனவுலகவாதிகள்
(2) வெற்றிக்காக விடாது உழைக்கும் பண்புடையவர்கள்
(3) கிடைத்ததைக் கொண்டு மகிழ்ச்சி அடைபவர்கள்
(4) ஒரே மாதிரியான வாழ்க்கையை நடத்துபவர்கள் [ ]

Q18. எப்போது வாழ்க்கையில் மனநிறைவு ஏற்படும்?

(1) உலகத்தில் மாற்றங்கள் நிகழும்போது
(2) வாழ்க்கையில் உயர்வினை அடையும்போது
(3) உழைத்து அதன் பயனைப் பெறும்போது
(4) எதிர்பாராத வெற்றிகள் கிடைக்கும்போது [ ]

<u>பகுதி 2</u>



இந்தியர்கள் வீணையைப் புனிதமான இசைக்கருவியாகப் போற்றி மதிக்கின்றனர். வீணை இன்றோ நேற்றோ இந்தியர்களுக்கு அறிமுகமான இசைக்கருவியல்ல. இதனை மிகப் பழங்காலத்திலிருந்தே இந்தியர்கள் பயன்படுத்தி வருகின்றனர். நாற்காலி, மேசை முதலியவற்றைச் செய்யப் பலவகையான மரங்களைப் பயன்படுத்தலாம். ஆனால், பலாமரங்களில் மட்டுமே தரமான வீணையைத் தயாரிக்க முடியும். இவ்வாறு தயாரிக்கப்படும் வீணைகள் இருவகைப்படும். ஒரே மரத்துண்டைக் கொண்டு உருவாக்கப்படும் வீணை ஏகாந்தவீணை எனப்படும். மரத்துண்டுகள் பலவற்றைக்கொண்டு வீணையின் பாகங்களைத் தனித்தனியே தயாரித்து ஒன்றாக ஒட்டி உருவாக்குவது ஒட்டுவீணை எனப்படும். ஏகாந்தவீணையிலிருந்து வரும் ஒலி அதிர்வு, ஒட்டுவீணையிலிருந்து வருவதைக் காட்டிலும் சத்தமாகவும் இனிமையாகவும் இருக்கும்.

# ‘இ’ பிரிவு

**சுயவிடைக் கருத்தறிதல்** *(25 மதிப்பெண்கள்)*

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை தருக.**



ஒரு நாட்டின் மிகப் பெரிய சொத்து அதன் பொருளாதார வளர்ச்சியா ? விஞ்ஞான எழுச்சியா ? நாகரிக மறுமலர்ச்சியா ? என்ற வினாவிற்கு இவை எல்லாவற்றிற்கும் ஆதாரமாய் இருக்கும் ஆரோக்கியம்தான் என்று விடை கூறலாம். ஆரோக்கியமில்லாத மக்களால் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியையோ, விஞ்ஞான எழுச்சியையோ, நாகரிக மறுமலர்ச்சியையோ ஏற்படுத்த முடியாது. அத்தகைய விலை மதிப்பற்ற ஆரோக்கியத்துக்கு முதல் எதிரி புகை. அதனால் மனிதனுக்கு உள்ளும் புறமும் ஏற்படுவது **மாசு.** உலகில் அதிக மரணங்களுக்குக் காரணமாக இருப்பது புகையிலைதான் என்று உலக சுகாதார ஆய்வு தெரிவிக்கிறது. புகையிலைப் பழக்கத்தால் மட்டும் ஆண்டொன்றுக்கு 25 லட்சம் பேர் மரணத்தைத் **தழுவுகின்றனர்.**

கொடிய நோய்களை உருவாக்கக்கூடிய நிகோடின், தார், கார்மோனாக்சைடு, ஹைட்ரஜன், சைனைட் உள்பட 23 நச்சுப்பொருட்கள் புகைப்பவர்களின் ரத்தத்தில் கலக்கின்றன. இவை வாய், நுரையீரல், உணவுக்குழல், இரைப்பை புற்றுநோய்களை உருவாக்குகின்றன. தானும் கெட்டுப் பிறரையும் கெடுக்கும் மோசமான பொருள் புகையிலை. புகைப்பவர் விடுகிற புகையைச் சுவாசிப்பவர்கள், புகைப்பவர்களைவிட மோசமான பாதிப்பை அடைகிறார்கள். புகையின் தாக்கத்தில் மதுக்கடை ஊழியர்கள் பயங்கரமான சுவாச நோய்க்கு உள்ளாகிறார்கள். இப்படிப் புகைப்பவர்கள், புகையைச் சுவாசிக்கிறவர்கள் என்று பெறும் சமுதாயச் சீரழிவை ஏற்படுத்துகிற புகையிலையை ஏன் உற்பத்தி செய்கிறார்கள் ? தடுக்க வேண்டியதுதானே என்ற கேள்வி எழுவது இயல்பு. அதற்குப் புகையிலை உற்பத்தி செய்யும் நாடுகள் சொல்கிற காரணம் என்ன தெரியுமா ?! வளரும் நாடுகளில் ஏராளமான வேலை வாய்ப்பையும், வரி வருமானத்தையும் தரும் பயிர் புகையிலைதான். இவை தடை செய்யப் பட்டால், வேலையின்மையும் வருமான இழப்பும் ஏற்படும்! என்று உயிர் குடிக்கும் இந்தப் பயிரை வளர்ப்பதற்கும், அது தொடர்பான தொழில்களை அனுமதிப்பதற்கும் காரணம்–வியாக்கியானங்கள் செய்கிறார்கள். ஆனால் இது கண்ணை விற்றுச் சித்திரம் வாங்குகிற முட்டாள்தனம் என்பதை, இன்னொரு கோணம் படம் பிடித்துக் காட்டுகிறது. அதாவது, புகையிலை மூலம் வருகிற வருமானத்தை விட, மூன்று மடங்கு செலவு புகையிலைப் பழக்கத்தால் ஏற்படும் நோய்களைக் குணமாக்குவதற்கு ஆகிறது. அது மட்டுமல்ல மனிதனின் உற்பத்தி ஆற்றலைப் பாதிக்கிறது, உற்பத்தியின் வேகத்தை மட்டுப்படுத்துகிறது என்று மருத்தவ வல்லுனர்கள் தெரிவிக்கிறார்கள். இதைப் பற்றி உலகச் சுகாதார நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர் புகையிலைப் பொருளாதாரம் போலிப் பொருளாதாரம் என்கிறார்கள். நான்கு மில்லியன் ஹெக்டேர் நிலத்தில், உலகம் முழுக்கப் புகையிலை பயிரிடப்படுகிறது. இவை அனைத்தும் உணவு தானிய உற்பத்திக்குப் பயன்படுத்தப் பட்டால் உலகில் உணவுப் பஞ்சமே இருக்காது.